P.R.NO:-13

6/9/19

# திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்ள தலைவர் அவர்களின் "பத்திரிக்கை செய்தி"

திருச்சிராப்பள்ளி மாவட்ட / மாநகரப் பகுதிகளில் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி (டிஜிட்டல் பேனர்கள் மற்றும் தட்டிகள் வைத்திட அனுமதித்தல்) விதிகள் 2011-ன் விதிகளுக்கு மாறாக மாவட்ட நிர்வாகத்தின் முன்அனுமதியின்றி தனியார், அரசு நிலம் மற்றும் கட்டிடம், சாலைகள், மைதானங்கள் உள்ளிட்ட பொதுவெளிகளில், பொதுமக்களுக்கு, சாலை பயன்பாட்டாளர், பாதசாரிகளுக்கு இடையூறு ஏற்படும் வண்ணம் விளம்பர, வரவேற்பு பதாகைகள் மற்றும் தட்டிகள் அமைப்பது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறு அனுமதியின்றி விளம்பர, வரவேற்பு பதாகைகள் மற்றும் தட்டிகள் அமைத்தல் சட்டத்திற்கும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழக்கு W.P 33819/2018 முதலான வழக்குகளில் 19.12.2018 தேதிய தீர்ப்புக்கும், நீதிமன்ற அவமதிப்பு வழக்கு 61/2019 நாள்: 07.08.2019 தேதிய தீர்ப்புரைக்கும் எதிரானதாக அமையும் என்பது தெரிவிக்கப்படுகிறது. இத்தகைய சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது காவல்துறை மூலம் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், ரூ. 5000/- (ரூபாய் ஐந்தாயிரம்) அபராதமும் ஒரு ஆண்டு சிறை தண்டனை வழங்கிடவும் வழிவகை உள்ளது என்ற விபரமும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இத்தகைய சட்ட விரோத செயல்களில் ஈடுபட வேண்டாம் என மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்கள் கேட்டுக் கொள்கிறார்கள்.

ஒம்./- சு.சிவராசு
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருச்சிராப்பள்ளி.

/உத்தரவுப்படி/

6/9/19
மாவட்ட ஆட்சித் தலைவருக்காக.

6.9.19.